கடையநல்லூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2026-2027 ஆம் கல்வியாண்டின் முதுகலை பாடப்பிரிவுகளுக்கு விண்ணப்பித்துள்ள மாணவ, மாணவிகளுக்கு கீழ்க்கண்ட நாட்களில் கலந்தாய்வு நடைபெறும். முதுநிலை முதலாம் ஆண்டு மாணவ, மாணவியர்களுக்கு வகுப்புகள் 19.08.2026 (புதன்கிழமை) அன்று தொடங்கும்.

| வ.எண். | விவரம் மற்றும் துறைகள் | நாள் |
|---|---|---|
| 1 | சிறப்பு ஒதுக்கீடு (Special Quota) கலந்தாய்வு : ஆங்கிலம், வணிகவியல், கணிதம், கணினி அறிவியல் | 10.08.2026 (திங்கள் கிழமை) |
| 2 | முதலாம் கட்ட பொது கலந்தாய்வு : ஆங்கிலம், வணிகவியல், கணிதம், கணினி அறிவியல் | 13.08.2026 (வியாழன் கிழமை) |
| 3 | தொடர் பொது கலந்தாய்வு : ஆங்கிலம், வணிகவியல், கணிதம், கணினி அறிவியல் | 14.08.2026 மற்றும் 17.08.2026 முதல் (வெள்ளி மற்றும் திங்கள் கிழமை முதல்) |

கலந்தாய்வு குறித்த விவரங்கள் மாணாக்கர்களுக்கு தொலைபேசி அழைப்பு மற்றும் குறுந்தகவல் / மின்னஞ்சல் / வாட்ஸ் அப் மூலமாக தெரிவிக்கப்படும். கலந்தாய்வில் கலந்து கொள்ளும் மாணாக்கர்கள் காலை 9.30 மணிக்குள் பெற்றோருடன் வர அறிவுறுத்தப்படுகிறார்கள். கலந்தாய்வில் கலந்து கொள்ள தேவையான ஆவணங்கள் பின்வருமாறு.

1. இணையவழியில் விண்ணப்பித்த விண்ணப்ப படிவம் - 3
2. இளநிலை பாடப்பிரிவில் பயின்ற 5 பருவத்திற்கான மதிப்பெண் சான்றிதழ்கள் - தலா 3
3. மாற்றுச்சான்றிதழ் அசல் மற்றும் நகல் - தலா 3
4. ஆதார் அட்டை அசல் மற்றும் நகல் -3
5. சாதிச்சான்றிதழ் அசல் மற்றும் நகல் -3
6. வங்கி கணக்கு அட்டை அசல் மற்றும் நகல் -3
7. பாஸ்போர்ட் அளவு புகைப்படம் -5
8. வருமானச்சான்று நகல் -3

9. சேர்க்கை கட்டணம்

மேலும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி (Mobile Phone) கட்டாயம் கொண்டு வர மாணாக்கர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள் என கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார்.

இணையதள முகவரி : www.gasckadayanallur.com